# வெளிநாட்டுதூதுவர்கள் கிழக்குபகுதிக்கு விஜயம்

(கொழும்பு) திருமலை, மட்டுநகர், அம்பாறை ஆகிய இடங்களிலுள்ள தமிழர் நிலையைநேரில் கண்டறிவதற்காக, வெளிநாட்டுத் தூதுவர்கள் விஜயம் மேற்கொண்டு அங்கு சென்றுள்ளனர். இலங்கை இராணுவத்தின (4-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாண [illegible] நூலகம்

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 20 இதழ் 238
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 06 — 10 — 1992

## ஆனையிறவிலிருந்து ஷெல் தாக்குதல்

(பளை) இயக்கச்சி, கட்டைக்காடு, ஆனையிறவு ஆகிய முகாம்களிலிருந்து இரவு நேரங்களில் தொடர்ந்து ஷெல் தாக்குதல், துப்பாக்கிச்சூடும் மேற்கொள்ளப்படுகிறது.

இச் ஷெல்களில் சில மிருசுவில், எழுதுமட்டுவாள் பகுதிகளிலும் விழுந்து வெடிக்கின்றன. இதனால் மக்கள் பெரும் அச்சத்துடன் இரவு பொழுதைக் கழிக்கின்றனர். (4ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் விமானத்துக்கு போர் விமானங்கள் பாதுகாப்பு

(கொழும்பு) ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு ஆகாயப்பிராந்தியத்தில் போர் விமானங்கள் பாதுகாப்பு வழங்கின. பங்களாதேஷ் விஜயத்தின் போதே அவருக்கு இத்தகைய பாதுகாப்பு வழங்கப்பட்டது. ஜனாதிபதி பயணம் செய்த (4ம் பக்கம் பார்க்க)

★ கட்டைக்காட்டுப் பகுதியில்

# ஆயுதக்கிடங்கு பறிபோனதால் அதிகாரிகள் பதவியில் மாற்றம்?

## இராணுவ தளபாடஇறக்குமதியும் பாதிப்பு

(கொழும்பு)

கட்டைக்காட்டில் கடந்த வியாழக்கிழமை விடுதலைப் புலிகளிடம் ஸ்ரீலங்கா ராணுவத்தினர் ஆயுதக்கிடங்கை பறிகொடுத்த சம்பவம் ஆயுதப்படையினரின் உயர் பதவிகளில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுவதாக ராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ராணுவ ரீதியில் இந்தச் சம்பவம் இலங்கைக்கு சர்வதேச அரங்கில் பெரியதொரு பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதாகவும் ராணுவ ஆய்வாளர்கள் தெரிவிந்துள்ளனர்.

சட்டைக்காட்டுச் சம்பவத்தையடுத்து இலங்கைக்கான வெளிநாட்டு ஆயுதக் கொள்வனவில் பெரும் தடங்கல்கள் ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் 1990ம் ஆண்டு ஸ்ரீலங்கா படையினருடன் மோத ஆரம்பித்த பிறகு புலிகளால் கைப்பற்றப்பட்ட பெருந்தொகையான (4ம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழக கலைப்பீட விரிவுரைகள் 14-ம் திகதி ஆரம்பம்

(திருநெல்வேலி) யாழ். பல்கலைக்கழக கலைப் பீட விரிவுரைகள் யாவும் எதிர்வரும் 14-ம்திகதி ஆரம்பமாகும் என யாழ்ப்பாண பல் (4-ம் பக்கம் பார்க்க)

## வெளிவாரி மாணவர் பரீட்சை முடிவடைந்தது

(திருநெல்வேலி) யாழ்ப்பாண பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கான முதலாம் வருடம் பரீட்சைகள் யாவும் நேற்று தின் (4ம் பக்கம் பார்க்க)

மலையகத்தில்

## மாடிக்கட்டிடம் இடிந்து 50 பேர் படுகாயம்

(கொழும்பு) ஹற்றன்-டிக்கோயாப்பகுதியில் உள்ள தேயிலைத் தோட்டம் ஒன்றில் மாடிக் கட்டிடம் ஒன்று இடிந்து விழுந்ததில் 50 பேர் டடுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இச்சம்பவத்தில் படுகாயமடைந்த அனைவரும மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் மாடிக் கட்டிடம் இடிந்து விழுந்ததற்கான காரணம் பற்றி தெரியவரவில்லையென்றும் கூறப்படுகிறது (க)

## 12 வேங்கைகள் நினைவுதினம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்) லெப்.கேணல் புலேந்திரன், லெப். கேணல் குமரப்பா உட்பட 12 வீரவேங்கைகளின் 5-ம் ஆண்டு நினைவு தினம் நேற்று தமிழீழம் எங்கும் உணர்ச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

வீதிகள் எங்கும் மஞ்சள் சிகப்பு கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன. முக்கிய சந்திகளில் 12 வீரவேங்கைகளின் திருஉருவப்படங்கள் அடங்கிய நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டு மக்களால் அஞ்சலி செலுத்தப்பட்டன.

12 வீரவேங்கைகளின் பூதவுடல்கள் தீயுடன் சங்கமமான, வடமராட்சி தீருவில் பகுதியில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபிக்கு அருகில் மாபெரும் அஞ்சலிக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

யாழ் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலுமிருந்தும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் இக்கூட்டத்தில் கலந்து (4-ம் பக்கம் பார்க்க)

## தமிழகத்திலிருந்து வரும் அகதிகளுக்கு வவுனியாவில் பாரிய முகாம்

(கொழும்பு) தமிழகத்திலிருந்து இலங்கை வரும் தமிழ் அகதிகளை தங்க வைப்பதற்காக பாரிய முகாம் ஒன்று வவுனியாவில் அமைக்கப்பட்டு வருகிறது.

65 ஏக்கர் விஸ்தீரணத்தில் அமைக்கப்படவுள்ள மேற்படி முகாம் சுமார் 20 ஆயிரம்பேர் தங்குவதற்கு ஏற்ற வகையில் பல லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ. நா. அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் இம்முகாம் அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. (க)

## இலங்கை பிரிவதை அனுமதிக்க முடியாது — கே. பி. இரத்ணயக்கா

(கொழும்பு) இலங்கை பிரிக்கப்படுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாதென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினரும் நாடாளுமன்ற அங்கத்தவருமான கே. பி இரத்ணயக்கா தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் அண்மையில் நடைபெற்ற மீலாத் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்ற பேதத்தை மறந்து அனைவரும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்றும் குறிப்பிட்டார். (க)

## வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்கு ஜெர்மன் அரசு உதவி

(திருகோணமலை) வடக்கு கிழக்கு மாகாணத்தின் கல்வி, கலாச்சாரம், சமூகசேவை, புனருத்தாரணம் ஆகிய திட்டங்களுக்கு இருபத்தைந்து கோடி ரூபா பெறுமதியான உதவியை ஜேர்மன் அரசு வழங்கியுள்ளது. இவ்வுதவியைக்கொண்டு வடக்கு கிழக்கு மாகாண அமைச்சு பாடசாலை தளபாடங்கள் பெறுவதற்கு கூடிய நிதியை ஒதுக்கவுள்ளது. (எஸ்)

## சுவீடன், கனடா இல.தமிழரை திருப்பி அனுப்ப முயற்சி?

(கொழும்பு) சுவீடன், கனடா, மற்றும் சில மேற்கு ஐரோப்பிய நாடுகளில் அகதிகளாக தங்கியிருக்கும் இலங்கைத் தமிழர்களை இலங்கைக்கு திருப்பியனுப்பும் முயற்சியில் சம்பந்தப்பட்ட நாடுகள் ஈடுபட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது முதற்கட்டமாக மேற்குறிப்பிட்ட நாடுகளில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்கு வரவழைத்து அவர்களை தங்கவைப்பதற்கான (4ம் பக்கம் பார்க்க)

தமிழ் இனத்தைக் காக்கும்
வன வளத்தைக் காப்போம்

## வரி விளம்பரம்


### முடக்கொத்தான் குளிகை

முடக்கொத்தான் இலையில் தயாரித்த Welpenla capsules கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி- 6800)


## வெள்ளம்

(அரியாலை)

யாழ் மாவட்டத்திலும் கிராமப்பகுதிகளிலும் நேற்றுப் பெய்த மழையினால் தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. மிளகாய், கத்தரித் தோட்டங்களிலும் வெள்ளம் நிற்பதால் நீரை அகற்றும் பணிகளில் தோட்டக்காரர்கள் ஈடுபட்டுள்ளனர். யாழ். மடம் வீதி, கேணிக்குளமும் மழையினால் நிரம்பியுள்ளது.

(59)

## மாவீரர் நாளுக்கான ஆக்கங்கள்

(யாழ்ப்பாணம்)

நவம்பர் மாதம் 27 ம் திகதி நடைபெறவுள்ள மாவீரர் நாளுக்கான கலை ஆக்கங்களின் பிரதிகளை பரிசீலனைசெய்வதற்காக இம்மாதம் 15 ம் திகதிக்கு முன்னதாக விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகம் கோண்டாவிலில் அமைந்துள்ள யாழ். மாவட்ட செயலகத்தில் ஒப்படைக்குமாறு வேண்டப்பட்டுகிறது.

## மிதிவண்டி மாறியது

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரி மிதிவண்டி பாதுகாப்பு நிலையத்தில் லுமாலா இல: ஜே.164824 உடைய மிதிவண்டி ஒன்று மாற்றி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. மாற்றி எடுத்துச் சென்றவர் நோயாளர் நலன்புரிச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## இராசி பலன்

**06-10-1992**

**செவ்வாய்க்கிழமை**

**(தமிழுக்கு புரட்டாதி 20)**

தசமி பிற்பகல் 3-01 வரை, திருவோணம் முற்பகல் 11-08 வரை, இராகுகாலம் காலை 3-02 முதல் 4-32 வரை. சுபநேரம் காலை 10-32 முதல் 12-02 வரை. சித்தயோகம்.

மேடம்: புதிய முயற்சி, நண்பர் வருகை, காரிய சித்தி.

இடபம்: கெட்ட சினேகம், கடும்சினம், இடமாற்றம்.

மிதுனம்: குடும்பக்கவனம், அவமானம், கைப்பொருள் இழப்பு.

கடகம்: பெண் மூலம் உதவி, காரிய சித்தி, பாராட்டு.

சிங்கம்: விரோதிகள் வெற்றி நோய் குணமாதல், தானதர்மம்.

கன்னி: மதிப்பு குன்றுதல், புத்திரர்துன்பம், வெறுப்பு.

துலாம்: பயணசிரமம், தொழில்பகைமை, மனச்சுமை.

விருச்சிகம்: தொழில் லாபம், புத்திரர்மேன்மை, புதிய முதலீடு.

தனுசு: வீண் மனக்கவலை, கடன்காரர் தொல்லை, செலவு.

மகரம்: திருமணப் பேச்சு, குடும்ப உல்லாசம், சகோதர உதவி.

கும்பம்: பிறர் குறைகேட்டல், தொழில் நஷ்டம், குடும்பப் பிரிவு.

மீனம்: தற்பெருமை, தொழில் பாராட்டு, வாக்கு வன்மை.

— ஜோஸ்யர்

# சிங்கள குடியேற்ற திட்டத்தில் பெண்களுக்கு ராணுவ பயிற்சி

## ராணுவத் தளபதி ஏற்பாடு

(கொழும்பு)

சிங்கள குடியேற்றத் திட்டங்களில் வாழும் ஆண்களுக்கு மாத்திரமன்றி பெண்களுக்கும் ஆயுதப்பயிற்சி அளிக்கப்படும் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன குடியேற்றத்திட்டங்களுக்கு பாதுகாப்பளிக்கும் புதியநடைமுறையில் மேற்கண்ட முடிவு எடுத்துள்ளார் எனத் தெரிய வருகின்றது.

ஏற்கனவே மணலாற்றில் குடியேற்ற வாசிகளுக்கு ஆயுத பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. என்றும் இரண்டாவதாக வவுனியாவில் ஆயுதப்படையினருடன் இணைந்து குடியேறியுள்ள ஆண்களும் பெண்களும் குடியேற்றத்திட்டத்தை பாதுகாப்பார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சு)

## ஆசிரியர் ஆலோசகர் பதவி வெற்றிடம்

(உடுவில்)

மருதனாமடம் கல்விக்கோட்டத்தில் பல ஆசிரிய ஆலோசகர் பதவிகளுக்கு வெற்றிடங்கள் இருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

விஞ்ஞானம் 02, கணிதம்02, ஆரம்ப கல்வி 01, தமிழ் 10, சமூகக் கல்வி 02. மனையியல் 01, விவசயம் 01. ஆகிய பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளதாக தெரியவருகிறது.

பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் (பயிற்சியின் பின எட்டுவருட அனுபவம்) பட்டதாரி டிப்ளோமா ஆசிரியர்கள் (டிப்ளோமாவிற்கு பின் ஐந்து வருட அனுபவம்) ஆகியோர் இப்பதவிகளுக்கு விண்ணப்பக்கலாம். (109)

## காலநடைகளை கட்டி வளர்க்குமாறு ஒலிபெருக்கி அறிவிப்பு

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை, நவாலி பகுதியிலுள்ள ஆடு, மாடு கோழி, பன்றிகளை கட்டி வைத்து வளர்க்குமாறு ஒலி பெருக்கி மூலம் நேற்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஆனைக்கோட்டை கிராமிய உற்பத்திக் குழுவினால் விடுக்கப்பட்ட இவ்வேண்டுகோளில் இப்பகுதியில் காலபோக நெற்செய்கை ஆரம்பமாகியுள்ளதால் கட்டாக்காலி ஆடு, மாடு பன்றிகள்வந்து அழிக்காதபடி அவற்றை கட்டி வைத்து வளர்க்குமாறும் மீறுவோருக்கு தண்டம் அறவிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (71)

## உலோக, மரவேலை விஞ்ஞான வேலைத் தளம்

(வட்டுக்கோட்டை)

யாழ் கல்வித் திணைக்களத்தில் விஞ்ஞானம், மரவேலை, உலோகவேலைகளுக்கான வேலைத்தளம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இந்தவேலைத் தளத்திற்கான பொறுப்பதிகாரியாக யாழ் கல்வித்திணைக்கள உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. எஸ். கமலநாதன் நியமிக்கப் பட்டுள்ளார்.

விஞ்ஞானம், மரவேலை, உலோகவேலைகளைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் கற்கும் மாணவர்களுக்கும் உதவி புரிந்து இத்துறைகளை மேலோங்கச் செய்யும் வகையிலேயே இந்தவேலைத்தளம் அமைக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (139)

## பல்கலைக்கழகங்களில் ஆசிரியர்களாக சேர தகுதியானவர்கள் தயக்கம்

(கொழும்பு)

இலங்கைப் பலகலைக்கழகங்களில் தராதரம் உள்ளவர்கள் விரிவுரையாளராக வருவதற்கு அவ்வளவுவிருப்பம் காட்டுவதில்லையென பலகலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பல்கலைக்கழகங்களில் உள்ள வசதிகளிலும் பார்க்க. தனியார் துறைகளில் கவர்ச்சிகரமான சலுகைகள் வழங்குவதால் தனியார் துறைக்கே தகுதியுடையவர்கள் செல்வதில் நாட்டம்கொண்டுள்ளார்கள் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதுவிடயத்தில் அரசாங்கம் அக்கறை செலுத்தாது போனால், பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர் வெற்றிடங்கள் அதிகரிக்கும் என்று பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார். (சு)

## கணித - விஞ்ஞான ஆசிரியர்களாக 15 பேர் நியமனம்

(நல்லூர்)

கணித, விஞ்ஞான ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகப் பரீட்சை கடந்த மாதம் 24-ம் திகதி திருகோணமலையிலுள்ள வடகிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்றது.

மேற்படி நேர்முகப் பரீட்சைக்கு யாழ் மாவட்டத்திலிருந்து பரீட்சைக்குத்தோற்றியவர்களுள் 22 பேருக்கு மட்டுமே நேர்முகப்பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தன. இவர்களில் 15 பேர் மட்டும் குறிப்பிட்ட தினம் நடைபெற்ற நேர்முகப்பரீட்சையில் கலந்து கொண்டனர்.

நேர்முகப்பரீட்சையில் தோற்றியவர்களுக்கான நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டதுடன் இம்மாதம் முதலாம் திகதி இவர்களுக்கான நியமனமும் வழங்கப்பட்டுள்ளது. (158)

## இலங்கை வங்கியின் மகளிர் சிக்கன சேமிப்பு திட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் 53-வது ஆண்டு விழாவை முன்னிட்டு மகளிருக்கென ஆரம்பிக்கப்பட்ட சிக்கன சேமிப்புத்திட்டம், யாழ் நகரில் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படுவதாக இலங்கை வங்கி, யாழ்ப்பாண மாவட்ட அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

'மகளிர் பொற்கணக்கு சேமிப்புத் திட்டத்தை 500 ரூபாவுடன் ஒருவர் ஆரம்பிக்கலாம். மற்றைய சேமிப்புத் திட்டங்களுக்கு வழங்கப்படடும் வட்டியைவிட இத்திட்டத்து சேமிப்புக் கணக்குகளுக்கு ஒருவீத வட்டி கூடுதலாக வழங்கப்படுவதுடன் இம்மாத முடிவுக்குள் இந்த சேமிப்புத் திட்டத்தில் சேர்ந்துகொள்ளும் பெண்களுக்கு வெளிநாடுகளுக்கு இலவசமாகச் சென்றுவரும் சந்தர்ப்பங்களும் அதிஷ்டலாப மூலம் வழங்கப்படுமென்றும், இத்திட்டம் யாழ் மாவட்டத்தில பெண்கள் மத்தியில் தற்போது பிரபல்யமடைந்து வருவதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (வி)

## வித்தியாரம்பம்

(அரியாலை)

அந்திரான் அன்னை வேளாங்கண்ணி பாலர் பாடசாலையில் கடந்த 5-ந் திகதி திங்கட்கிழமை விஜயதசமியன்று முகூர்த்தவேளை மாலை 4-00 மணிக்கு வித்தியாரம்ப விழா நிகழ்ச்சி பாலர் பாடசாலை ஆசிரியை செல்வி குயின்ரா ராசேந்திரம் தலைமையில் நடைபெற்றது.

இதற்கான இலவச ஏடுகளை யாழ். சர்வோதயம் அன்பளிப்பு செய்தது. இவ்விழாவில் பிள்ளைகளின் பெற்றோர்கள், ஆசிரியர்கள், பாடசாலை சங்க உறுப்பினர்கள் ஆகியோர் பங்குபற்றினர். (59

## விஜயதசமி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் அவை நடாத்தும் விஜயதசமி விழா இன்று காலை 8 மணிக்கு கல்லூரியில் சிறப்பாக நடைபெற ஏற்பாடாகியுள்ளது

பூசைகளைத் தொடர்ந்து திரு. கானமூர்த்தி-பஞ்சமூர்த்தி சகோதரர்களின் நாதஸ்வரக்கச்சேரியும் கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெராஜ் தலைமையிலான பட்டிமன்றமும். இரத்த தானம் செய்தோர் கௌரவிக்கப்படலும் இடம்பெறும் இறுதியில் கல்லூரி மாணவர்களின் நாடகங்களும் இடம் பெறும்.

## இடம்பெயர்ந்தவர்களுக்கு 2300 குடிசைகள் அமைக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வலிவடக்கு - வலிமேற்குப் பகுதிகளில் அண்மையில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால்கடுமையாகப்பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து அகதிகளாய் ஆலயங்கள் பாடசாலைகளில் நிர்க்கதியற்ற நிலையில் இருக்கின்ற குடும்பங்கட்கு 2300 குடிசைகளை உடன் அமைத்துக்கொடுக்குமுகமாக யாழ் அரச அதிபர் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

தென்மராட்சிப் பகுதிகளிலேயே இக்குடிசைகள் அமைத்துக்கொடுக்க முன்வந்துள்ளார்.

இதற்கான ஏற்பாடுகளில் அரசசார்பற்ற நிறுவனங்கள் துரிதகதியில் ஈடுபட்டுவருகின்றன.

அகதிமுகாம்களில் இருக்க முடியாத அவலநிலை தோன்றியுள்ளதனால் இம்மாத முடிவிற்குள் 2300 குடிசைகள் அமைத்துக்கொடுக்கபபட்டுவிடும் என செயலக வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (56)

## ஓட்டப்போட்டியில் மீண்டும் உஷா

(புதுடில்லி)

இந்தியாவின் முன்னாள் பிரபல ஓட்ட வீராங்கனையான பி. ரி உஷா மீண்டும் ஓட்டப் போட்டிகளில் கலந்துகொள்ளப்போவதாக அறிவித்துள்ளார்.

கடந்த ஒரு ஆண்டுக்கு முன்னர் திருமணம் செய்து கொண்டதின் நிமித்தம் விளையாட்டு உலகிலிருந்து ஓய்வுபெற்ற பி. ரி. உஷா தற்போது ஒரு குழந்தைக்கு தாயானபின்பு, மீண்டும் ஓட்டப்போட்டிகளில் கலந்துகொள்ளப் போவதாகக் கூறியது பெரும்பாலானோருக்கு பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)


இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ். கிளை,
தலைமையகம்.

## 'இருட்டில் ஒளி ஏற்றுவோம்'

''சண்டைகள் நடக்கும் இப்போர்க்கால சூழ்நிலையில்,
அகதிகளாய் பெருகி அல்லலுறும் மக்களுக்கு,
சமைத்த உணவோ அன்றி சத்துணவு தந்து,
செவ்வனே சேவை செய்வது செஞ்சிலுவைச் சங்கம் தான்.''

**உங்கள் உதவி இவற்றுக்கு அவசியம்**

**கொடிவாரம் 1992 ஒக்டோபர் 7ம் திகதி முதல் 15ம் திகதி வரை**

**எங்கள் உறுப்பினர் உங்கள் வீடு வருவார்கள்**
**உங்கள் அன்புக்காக, அன்பளிப்புக்காக**

**வாரி வழங்குங்கள்**
**நம் மக்கள் வாழ்வுக்காக**
**வாரி வழங்குங்கள்!**

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்ப்பாணக் கிளை.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
5-10-92

(ஏ-2487)

### ★ அம்ஸ்ரடாமில் நேற்று முன்தினம் மாலை பயங்கரம்

# சரக்கு விமானம் மாடிக் கட்டிடத்தில் வீழ்ந்தது! 200க்கும் அதிகமான குடியிருப்பாளர்கள் பலி!!

## தீப்பிழம்பு நகரை ஆக்கிரமித்தது!!!

(அம்ஸ்ரடாம்)

இஸ்ரேலிய சரக்கு விமானமொன்று நெதர்லாந்து தலைநகர் அம்ஸ்ரடாமில் வீழ்ந்து நொருங்கியதில் சுமார் 200 பேர் கொல்லப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அம்ஸ்ரடாம் 'சீபால்' விமான நிலையத்திலிருந்து நேற்று முன்தினம் மாலை புறப்பட்ட போயிங்-747 ரக ஜெட் விமானம் புறப்பட்ட சற்று நேரத்தில் அதன் இரு என்ஜின்களிலும் கோளாறு ஏற்பட்டது. விமானத்தை மீண்டும் புறப்பட்ட இடத்திற்கே கொண்டுவர அதன் மூன்று பைலட்டுகளும் பெரும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தபோது அந்த விமானம் விபத்திற்குள்ளாகியது.

விபத்திற்குள்ளான விமானம் 9 மாடிகளைக்கொண்ட கட்டிட தொகுதி ஒன்றின் மேல் வீழ்ந்து நொருங்கியது.

இதனால் இப்பகுதியிலிருந்த பல கட்டிடங்கள் தீயினால் சூழப்பட்டன. விமான எரிபொருளின் கொழுந்து விட்டெரியும் தீப்பிழம்பு மக்கள் தொகை நிறைந்த அந்த புறநகர் குடியிருப்புப் பகுதியின் பரவலான பல பகுதிகளுக்கும் பெருகிப் பரவி எரிந்தது.

விபத்து நடந்த இடத்திற்கு உடனடியாக விரைந்த நூற்றுக்கணக்கான அம்புலன்ஸ் வண்டிகளுடன் தீயணைப்புப் படையினர் உதவி மீட்புப் பணியில் பல மணி நேரம் ஈடுபட்டிருந்தனர்.

மீட்கப்பட்ட சடலங்களில் 3பைலட்டுகளின்சடலமாகும். விமானம் 9 மாடிக் கட்டிடத்தில் வீழ்ந்து நொருங்கி கட்டிடத் தொகுதிகள் தீப்பற்றிக் கொண்டதில் அக்குடியிருப்புகளில் வசித்த பலர் கொல்லப்பட்டும் பலத்த தீக்காயங்களுக்குள்ளாகியும் உள்ளனர்.

இதற்கிடையில் விபத்து நடந்த இடத்தில் பல விஷமிகளும், சமூக விரோத சக்திகளும் தங்களுக்கு சாதகமான விதத்தில் பயன்படுத்திக்கொண்டு சுய ஆதாயம் தேடிக்கொண்டதுடன் பேரழிவுற்ற அந்த இடத்தில் அவர்கள் கொள்ளையிட்டு வருவதாக நெதர்லாந்து வானொலி அறிவித்தது.

நல்ல நிலையில் புறப்பட்ட விமானத்தின் இரு என்ஜின்களும் ஒரே நேரத்தில் திடீரென பழுதடைந்ததற்கு சதி முயற்சி ஏதும் நடைபெற்றிருக்கலாமா என்பது குறித்து இஸ்ரேல் உடனடி விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (சி)

---

## பத்மநாபா கொலை வழக்கு 7ம் திகதிவரை ஒத்திவைப்பு

(சென்னை)

பத்மநாபா கொலை வழக்கு அடுத்த மாதம் 7ந் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் கைதான சுப்புலட்சுமி ஜெகதீசன், வை ரவிச்சந்திரன் வீரசேகரன், மருதநாயகம், நாகராஜன், ஞானசெபஸ்தியான் ஆகியோர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த வழக்குத் தொடர்பாக இரும்பொறை, விக்கி, சாந்தன் உட்பட 18 பேர் ஏற்கனவே சிறையில் வைக்கப்பட்டுள்ளனர்.

விசேட நீதிபதி எம். சவுந்தரபாண்டியன் முன்பாக வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குற்றம் சாட்டப்பட்டுள்ள அனைவருக்கும் குற்றப் பத்திரிகையின் இரண்டாம் பகுதி கையளிக்கப்பட்டுள்ளது. (சு)

---

## ★ வடக்கில் பெருமளவில் படைகள் கிழக்கில் யுத்த முனையில் புதிய இராணுவ சிப்பாய்கள்

[கொழும்பு]

ஸ்ரீலங்கா இராணுவம் பெருந்தொகையான துருப்புகளை வடபகுதிக்கு கொண்டு வந்துவிட்டு கிழக்கு மாகாணத்தை பாதுகாக்கும் கடமையை புதிதாக இராணுவத்தில் சேர்ந்தவர்களிடம் ஒப்படைத்திருப்பதாக பரவலாக கூறப்படுவதாக பி. பி. ஸி. தெரிவித்துள்ளது.

தமது தாக்குதல்களை தொடர்ந்து அதிகரிப்பதன் மூலம் வடபகுதியிலிருந்து இராணுவத்தினரை கிழக்கிற்கு அனுப்பவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகுமெனபுலிகள் நம்புவதாகவும் பி பி ஸி. குறிப்பிட்டது.

இதேவேளை வடபகுதியில் கடந்த ஒரு மாதத்தில் நூற்றுக்கணக்கான படையினர் புலிகளின் தாக்குதலில் உயிர் இழந்ததுடன் பலகோடி ரூபா பெறுமதியான போர்த் தளபாடங்களையும் புலிகளிடம்

(4ம் பக்கம் பார்க்க)

---

## ராஜீவ் கொலை வழக்கு: விசாரணைகள் நவம்பர் மாதம் ஆரம்பமாகும்

[சென்னை]

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணை நவம்பர் மாதம் முதல் வாரத்தில் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த விசாரணைக்கென விசேடமாக பூந்தமல்லியில் அமைக்கப்பட்டுவரும் தனி நீதிமன்றத்தில் விசாரணை ஆரம்பமாவதோடு அங்கு விசேஷ பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக மத்திய புலனாய்வு துறையின் விசேட குழு தலைவர் கார்த்திகேசன் கூறியதாவது:

'இந்தக் கட்டிடம் பல வகை பாதுகாப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. நவம்பர் மாத முதல் வாரத்தில விசாரணை ஆரம்பமாகும்.

ராஜீவ் கொலை தொடர்பான வாக்கு மூலங்கள் எல்லாம் தமிழில் இருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் பொறுப்பை எஸ். டி. ஐ யிடம் விசேட நீதிமன்றம் அளித்துள்ளது. இந்தப் பணியும் முடியும் தறுவாயில் உள்ளது.'' (சு)

---

மன்னாரில்

## விக்ரரின் நினைவஞ்சலி

(அரியாலை)

மன்னார் மாவட்டத்தில் அடம்பன், ஆண்டான்குளம் பகுதிகளில் எதிர்வரும் 12ம் திகதி திங்கட்கிழமை லெப். கேணல் விக்ரரின் மருசலீன் பியூஸ்லஸ் பனங்கட்டிக் கொட்டு) ஆறும் வருட நினைவு அஞ்சலியை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

---

## குமாரி கப்பல் வருகிறது

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து இன்று புறப்படும் குமாரி கப்பல் 7ம் அல்லது 8ம் திகதி பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இக் கப்பலில் அரிசி, சீனி, மா, பருப்பு, எரிபொருள், மருந்து வகைகள், தபாற் பொதிகள் எடுத்துவரப்படவுள்ளன.

அத்துடன் தனியார் வர்த்தகர்களுக்கும் அத்தியாவசியப் பொருட்கள் ஏற்றிவரக்கூடுமெனத் எதிர்பார்க்கப்படுகிறது. (56–160)

---

## தமிழர் அபிலாஷைகள் தீர்க்கப்படும்

### இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் நம்பிக்கை

(புதுடில்லி)

இலங்கைத் தமிழர்களின் நியாயமான அபிலாஷைகள் திருப்தியளிக்கும் வகையில் இனப்பிரச்னை தீர்க்கப்படுமென தாம் நம்புவதாக இந்தியப் பிரதமர் திரு நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது உரையாற்றுகையில், இதனைத் தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

இலங்கையின் ஒருமைப்பாட்டிற்குள் தமிழர் பிரச்னை தீர்த்து இலங்கையில் மீண்டும் சுமுகநிலை ஏற்படுத்தப்படவேண்டும் என்றார். (சி)

---

## ஜே.வி.பி. முக்கிய புள்ளிகள் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

தென்னிலங்கையில் கிளர்ச்சியை ஏற்படுத்த முற்பட்ட ஜே. வி பி. இயக்கத்தின் முக்கிய புள்ளிகள் சிலர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளார்.

பொலிசாரால் தேடப்படும் ஜே. வி. பி. முக்கியஸ்தர் ஒருவர் தமது சகாவுக்கு எழுதிய கடிதம் ஒன்று பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிசார் மேலும் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தென்பகுதியில் பெருமளவு ஆயுதங்கள் மீட்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (க–சி)

---

## சுதந்திரக் கட்சியினர் ஐ.தே.க.வில் சேர முயற்சி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் உட்பட பல அங்கத்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்வதற்கு திரைமறைவில் முயற்சிகள் மேற்கொண்டு வருவதாகவும் இதனால் கட்சி மேலும் பிளவுபடும் சாத்தியங்கள் அதிகரித்து வருவதாகவும் ஸ்ரீ ல சு. கட்சியின் மேலிடம் கவலை கொண்டுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில்; கட்சி உறுப்பினர்களிடையே நிலவும் கருத்துவேறுபாடுகள் அதிகரித்துவருகின்றன. கட்சிக்குள் இருகோஷ்டிகள் இயங்கும் சாத்தியங்கள் அதிகரித்துவருகின்றன.

இதேவேளையில் ஜனாதிபதி பிரேமதாசாவின் அடுத்த கட்ட நடவடிக்கை எதுவாக இருக்கலாம் என்பது குறித்து கட்சியின் தலைமைப்பீடம் உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

மேலும் கட்சியின் தலைமைத்துவ போட்டி தொடர்பாக அநுரா பண்டாரநாயக்காவுக்கும் சந்திரிக்கா விஜயகுமாரணதுங்காவுக்கும் இடையில்

(4-ம் பக்கம் பார்க்க)

---

### குடாநாட்டிலுள்ள ராணுவத்துருப்புகளை

# நீக்கும் அளவிற்குபுலிகளின் தாக்குதல் அமைந்து வருகிறது

## பி. பி. ஸி. நிருபர் விமர்சனம்

(லண்டன்)

யாழ். குடாநாட்டில் நிறுத்தப்பட்டுள்ள இராணுவ துருப்புக்களை நீக்கக்கூடிய அளவிற்கு இராணுவத்திற்கு நெருக்கடி கொடுக்கும் விதத்தில் விடுதலைப்புலிகள் தமது தாக்குதல்களை நடாத்திவருவதாக பி. பி. ஸி கொழும்பு நிருபர் சியாமா நோஸ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்து திரும்பிய அவர் மேலும் கூறுகையில்:

வடபகுதியில் தற்போது எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. புலிப்படையினர் தற்போது வவுனியாவிலுள்ள இராணுவத்தினரின் காப்பரண்களுக்கு அருகிலேயே வந்துவிட்டனர்.

வவுனியாவில் முன்பகுதியில் புலிகளுக்கு எதிரான தமிழ் குழுக்கள் நிற்கின்றன. இந்தக்குழுக்களும் இராணுவமும் அடுக்கடுக்கான மரக்கட்டைக் காப்பரண்களுக்கு பின்னால் நிலைகொண்டுள்ளன.

கிளிநொச்சி வரை செல்ல இரண்டரை மணிநேரபயணம் இப்பயணம் இந்த தகராற்றின் வரலாற்றை படம்பிடித்துக்காட்டுவதுபோல் உள்ளது. மாங்குளத்தை தாண்டிச்சென்றதும் ஆனையிறவு இராணுவ தடைமுகாமிலிருந்து வந்த மின்வெளிச்சத்தை காண முடிந்தது.

மாங்குளத்தில்தான் இராணுவம் நூற்றுக்கும் அதிகமான துருப்புகளை இழந்தது. சென்ற ஆண்டு ஆனையிறவு இராணுவ முகாம் புலிகளின் முற்றுகைக்குள்ளானதைத் தொடர்ந்து பெரும் தொகையான இராணுவத்தினர் இப்பகுதியில் இறக்கப்பட்டு ஒரு மாதம்வரை பெரும் யுத்தமே நடந்தது.

இருட்டின் துணையுடன் பலருடன் சேர்ந்து இத்தவாவியை கடந்தோம். ஆனையிறவு முகாமிலிருந்தும் பூநகரி பகுதியிலிருந்தும் இப்பகுதியைநோக்கி வெளிச்சங்கள் பாய்ச்சப்பட்டிருந்தன.

அரசு வடபகுதியின் மீது விதித்துள்ள பொருளாதாரத் தடை யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கையை முடக்கி விட்டது. பலவகை மருந்துகள்வடபகுதிக்குள் அனுமதிப்பதில்லை பெற்றோல் இப்போது அபூர்வமாக கிடைக்கும் பொருளாகி விட்டது.

யாழ்ப்பாணப் பகுதியில் ஓடும் வண்டிகள் பெரும்பாலும் புலிகளினுடையதாகவே இருக்கிறது. யாழ்ப்பாணத்தினுள் சென்றால் அகதிகள் குடியமர்த்தப்பட்டுள்ள வரிசை வரிசையான தென்னோலைக் குடிசைகளை இருட்டில் கூட காணமுடிகிறது.

இப்போது 3 லட்சத்திற்கும் மேற்பட்ட அகதிகள் யாழ் குடாவில் இருக்கின்றனர் யாழ்ப்பாணத்தில் எங்கு சென்றாலும் சைக்கிள்களின் மணி ஓசையை தான் கேட்கமுடிகிறது. பயணம்செய்வதற்கான ஒரேயொரு வாகனம் சைக்கிள்தான்.

இவ்வாறான பல அவலநிலையிலும்யாழ் குடாமக்கள் தமது வழமையான கடமையில் ஈடுபடுகின்றார்கள் என்றார். (சி)

# அம்பாறை மாவட்டத்தை

# சிங்களமயமாக்க அரசு முயற்சி

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தை முழுச்சிங்கள மயமாக்கும் திட்டத்தை தற்போது அரசு மேற்கொண்டு வருவதாக கூறப்படுகின்றது

அம்பாறை மாவட்டத்தில் உள்ள அரசு அலுவலகங்கள் அனைத்திலும் முழுச் சிங்களப் படிவங்கள் மட்டுமே தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்மக்களின் பெயர்கள் சிங்களப் பெயர்களாக திரிக்கப்பட்டு பதியப்படுகின்றன. தமிழர்களின் வசிப்பிடங்களின் பத்திரங்கள் சிங்களத்தில் வழங்கப்படுகின்றன. வாக்காளர் இடாப்புகளும் சிங்களத்தில் மாற்றப்படுகின்றன என்றும் கூறப்படுகின்றன.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள அரச அலுவலகங்களில் தமிழ் ஊழியர்கள் இருந்தும் கூட தனிச்சிங்கள மொழியே தற்போது அங்குநடைமுறைப் படுத்தப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது. (வி)

## 'சார்க்' அமைப்பு விதிகளில் மாற்றம் தேவை- பிரேமதாசா

(டாக்கா)

'சார்க்' உறுப்பு நாடுகள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதற்கு தீர்வுத் திட்டம் விதிக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி பிரேமதாசா, டாக்காவில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு உரையின்போது தெரிவித்தார்.

இதற்காக தற்போது சார்க் அமைப்பில் உள்ள விதிகளை மாற்றியமைக்கவேண்டும் என்றும் கருத்து தெரிவித்துள்ளார். (கே)

## குவைத் தேர்தல் நேற்று நடந்தது

(குவைத்)

ஈராக்கினால் கைப்பற்றப்பட்டு பின்னர் மீட்கப்பட்ட குவைத் நாட்டில் நேற்று நாடாளுமன்றத்திற்கான தேர்தல் நடந்தது.

குவைத் ஈராக்கிடம் இருந்து மீட்கப்பட்டதும், ஜனநாயக தேர்தல் ஒரு வருடத்துக்குள் நடத்தப்படும் என குவைத் மன்னர் அறிவித்ததற்கிணங்க நேற்று தேர்தல் நடத்தப்பட்டது.

இதேவேளை இங்கு பெண்களுக்கு வாக்குரிமை மறுக்கப்பட்டதால் அவர்கள் தேர்தலில் பங்குகொள்ளவில்லை (கே)

## மரம் நடுகை திட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் புனர்வாழ்வுக்கழகம், யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களிடையே மரம் நடுகைத் திட்டத்தை நேற்று ஆரம்பித்து வைத்தது.

யாழ். இந்துக் கல்லூரியில் இதுசம்பந்தமாக நேற்று நடைபெற்ற வைபவத்தில் யாழ் மாவட்ட கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம், மற்றும் திரு க. கனகராசா உட்பட பலர் கலந்துகொண்டனர். (வி)

## வாணி விழா

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்தின் வாணி விழா கல்லூரி அதிபர் அ. திருநாவுக்கரசு தலைமையில் நேற்று திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

ஆசிரியர் க ஏரம்பமூர்த்தி சக்தியின் சிறப்புப்பற்றி உரை நிகழ்த்தினர்.

மாணவ மாணவிகளின் கர் நாடக இசை, பூஜா நடனம், மெல்லிசை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (இ)

**சுதந்திரக்**

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பலதித கருத்துவேறுபாடுகள் நிலவுவதும் இதன் விளைவாக உட்கட்சிப் பூசல்கள் அதிகரித்துவருவதும தெரிந்ததே. (க)

**வடக்கில்**

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இழந்ததுள்ளதும் இங்கு குறிப்பிடவேண்டிய விடயமென்றும் பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது. (சி)

## அநுராவின் கை பலமடைகிறது

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் இளைஞர் அமைப்பில் கட்சியின் தேசிய அமைப்பாளர் அநுராபண்டாரநாயக்காவின் கை ஓங்குவதாக கட்சியுடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க)

## பரிசளிப்புவிழா

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு நடைபெறும்.

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் இதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசில்களை வழங்குவார். (இ)

## க. பொ. த.[சா/த] முன்னோடி தேர்வு

(யாழ்ப்பாணம்)

க. பொ. த (சாதாரணம்) முன்னோடித் தேர்வு எதிர்வரும் 27ம்திகதி ஆரம்பமாகி நவம்பர் 3ம் திகதிவரை நடைபெறும்;

இத்தேர்வுக்கு விண்ணப்பித்துள்ள தற்போது ஆண்டு 11இல் கல்வி பயிலும் பாடசாலை மாணவர் அனைவரும் தோற்றுவர். க பொ. த (சாதாரண வகுப்புகளுக்குரிய முழுப்பாடத்திற்கும் அமைவாகவே தேர்வுப் பாடங்களுக்கான வினத்தாள்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**ஜனாதிபதியின்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'ஏயார் லங்கா' விமானம் டாக்கா விமான நிலையத்தில் இறங்கும் வரை பங்களாதேஷ் ஆகாயப் பிராந்தியம் முழுவதும் 4 பங்களாதேஷ் போர் விமானங்கள் அருகருகே பறந்து பாதுகாப்பு வழங்கின

ஜனாதிபதி பிரேமா நேற்று முன்தினம் பங்களாதேஷ் பயணமாகியது தெரிந்ததே. (க)

**வெளிவாரி**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்கிழமையுடன் முடிவடைந்தன

நேற்றைய தினம் இறுதிப் பாடமான ஆங்கிலப்பாடப் பரீட்சை நடைபெற்றது. முதன்முறையாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இப்பரீட்சைகள் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

வெளிவாரி மாணவர்களாக பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களில் பெரும்பான்மையோர் இப்பரீட்சைக்குத் தோற்றியுள்ளதாக பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

இப்பரீட்சையினால்வடபகுதி மாணவர்களுக்கு பட்டதாரியாகும் வாய்ப்பு மேலும் அதிகரித்துள்ளதெனவும் அவர்கள் பிற இடங்களுக்கு சென்று வரும் சிரமமும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார். [157]

**கட்டைக்காடு**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுதங்கள கட்டைக்காட்டிலேயே கைப்பற்றப்பட்டது என்பது தெரிந்ததே.

பாதுகாப்பு செலவுக்கென அரசு பெருமளவு நிதியை ஒதுக்கியிருந்தும் கூட இது போன்ற சம்பவங்களால் பாதுகாப்பு நிதி ஒதுக்கீடுகளை மீள் பரிசீலனை செய்ய வேண்டிய நிலைக்கு அரசு தள்ளப்பட்டிருப்பதாகவும் பொருளாதார ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

**வெளிநாட்டு**

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ரின் நடவடிக்கைகளினால் அந்த இடங்களில் பாதிக்கப்பட்ட தமிழரின் தற்போதைய நிலையை நேரில் கண்டும், பார்த்தும் அறிவதற்காக இத் தூதுவர்கள் அங்கு சென்றிருப்பதாகக் கூறப்படுகிறது.

அண்மையில் பிரிட்டன். ஜேர்மனி, கனடாஆகிய நாடுகளின் தூதுவர்கள், மன்னார் மட்டுநகர் அம்பாறை, திருமலை ஆகிய இடங்களுக்குச் சென்று அகதிகளாக உள்ள தமிழ் மக்களின் பரிதாப நிலைகளை பார்வையிட்டுச் சென்றது குறிப்பிடத்தக்கது. [வி]

**சுவீடன்**

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது

இதன் முன்னோடி நடவடிக்கையாக கொழும்பில் உள்ள மேற்குறிப்பிட்ட நாடுகளின் தூதுவர்கள், கடந்த சில வாரங்களாக அம்பாறை, மட்டக்களப்பு, திருமலை மற்றும் வவுனியா பகுதிகளுக்கு அடிக்கடி சென்று அங்குள்ள நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும், அகதிகள் அங்கு குடியேற்றப் படுவதற்கான வாய்ப்புகள் பற்றி ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது (க)

### கிழக்கிலங்கை

## பல்கலைக்கழகத்திற்கு 172 மாணவர்கள் தெரிவு

(கொழும்பு)

கிழக்கிலங்கை பல்கலைக்கழகத்திற்கு மொத்தம் 172மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். 116 மாணவர்கள் கலைப் பீடத்திற்கும், 56 மாணவர்கள் வர்த்தக முகாமைத்துவ பீடத்திற்கும் இவ்வருடம் அனுமதி பெற்றுள்ளனர்

புதிய மாணவர்கள் அனுமதி பெறுவது தொடர்பான வைபவம அண்மையில் பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. (எஸ்)

## பஸ் ஆற்றில் விழுந்து 6 பேர் பலி

(சென்னை)

திருச்சி அருகே கொள்ளிடமாற்று புதுபாலத்தடியில் நேற்று அரசுபஸ் ஒன்று ஆற்றுள் விழுந்ததில் ஒரு பெண் உட்பட 6 பேர் பலியானார்கள். வேறு 41 பேர் காயமுற்றனர்.

தென்திசையில் வந்து கொண்டிருந்த ஜீப்புடன் மோதி இந்தபஸ் தலைகீழாக ஆற்றினுள் விழுந்ததால் இந்த விபத்து ஏற்பட்டது.

### வடமராட்சி

## முதல் கட்ட நிவாரணம் வழங்கப்பட்டது

(உடுப்பிட்டி)

கரவெட்டி பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் 29 பேருக்கு முதற்கட்ட நிவாரண நிதி இம்மாதம் முதலாம் திகதி யாழ்ப்பாண மாவட்ட வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மாவட்ட முகாமையாளர் திரு ரி. பி. முருகையாவினால் வழங்கப்பட்டது.

வறுமையிலும் . வறுமையானவர்களை கிராம அபிவிருத்தி ஐக்கிய நாணய சங்கங்கள், சனசமூகநிலையங்கள். கிராம முன்னேற்றச் சங்கங்கள். விளையாட்டுகழகங்கள் தொழிற்சங்கங்கள் போன்ற அமைப்புகளினால் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு இந் நிவாரணம் வழங்கப்படுகிறது.

பதினைந்து வீட்டுத்திட்டத்தின் கீழ் ஐயாயிரம் ரூபா நிவாரண வீடமைப்புத் திட்டத்தில் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில 15 பேருக்கும், பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 14 பேருக்கும் வீடமைப்பு முதற்கட்ட நிதியாக இரண்டாயிரம் ரூபா வழங்கப்பட்டது. (150)

**ஆனையிறவிலிருந்து**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை கடலில் கடற்படகுகளின் தொல்லை அதிகரித்து வருவதாகவும் இதனால் மீன் பிடிக்க மீனவர்கள் கடலுக்குச் செல்ல அச்சமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (156)

**12 வேங்கைகள்**

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டனர்.

மேறபடி கூட்டத்துக்கு முன்பு உடுப்பிட்டி சந்தியிலிருந்து ஆரம்பமான ஊர்வலத்தில். லெப். கேணல் புலேந்திரன், லெப். கேணல் குமரப்பா உட்பட 12 வீர வேங்கைகளின் திருஉருவப் படங்களும் கொண்டுசெல்லப் பட்டன.

யாழ். மாவட்ட கடல்புலி அரசியல் பொறுப்பாளர் திரு. மறவன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தின் ஆரம்பத்தில் கடல் புலிகளின் தளபதி திரு சூசை தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களான தேவர், யோகி, இளம்பரிதி, பரா உட்பட பலர்உரையாற்றினார்கள். (வி-51)

**யாழ்.பல்கலைக்கழக**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கலைக்கழகம் அறிவித்துள்ளது.

இதேவேளையில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான விரிவுரைகளும் எதிர் வரும் 14-ம் திகதி ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. எனினும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களது பெயர்ப்பட்டியலை இதுவரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதனால் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான விரிவுரைகளை ஆரம்பிப்பதில் தாமதங்கள் ஏற்படலாமென பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (157)

## மரண அறிவித்தல்

### திருமதி அருணாசலம் சேதுப்பிள்ளை

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கிளிநொச்சியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய அருணாசலம் சேதுப்பிள்ளை 3-10-92 சனிக்கிழமை அன்று கிளிநொச்சியில் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற (மலாயன் பென்சினியர்) அருணாசலத்தின் அன்பு மனைவியும் கிளிநொச்சி D7ல் வசிக்கும் அ. சுப்பிரமணியம், கிளிநொச்சி புதுமுறிப்பில் வசிக்கும் அ. லோகநாதன், கிளிநொச்சி ராஜன் ரெக்ஸ்ரைல்ஸ் அ. அம்பலவாணர் (மாணிக்கம், காரைநகர் பாலாவோடை க. லோகாம்பிகை (ஆச்சி) ஆகியோரின் அன்புத்தாயாரும் கிளிநொச்சி D 7 சு. இராஜேஸ்வரி, .கிளிநொச்சி புதுமுறிப்பில் வசிக்கும் லோ. மோகனம்பிகை, கிளிநொச்சி திருநகர் காலஞ்சென்ற மாணிக்கம் சரஸ்வதி, காரைநகர் பாலாவோடை அ. கணேசபிள்ளை கிளிநொச்சி கணேசபுரம் அம்பலவாணர் (மாணிக்கம்),பவளராணி ஆகியோரின் மாமியாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 4-10-1992 ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்றது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள், அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல்;

அ, சுப்பிரமணியம்

D 7 , கிளிநொச்சி. (சி-6862)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட்டுக்காக [illegible] நாவலர் வீதி [illegible] அச்சகத்தில் 1992-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 6ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under licence number No B/10637/